முத்தமிழ்!

...றவே நெஞ்சில் இனித்த தமிழ்மொழியைக்
...டறவே காத்துக் கெடுப்பார் தமைக்கெடுத்துப்
...றவே வெட்டப் புறப்பட்டே னென்றவர்முன்
...ய பைங்கிளியே பேசு!

...குள் நச்சைப் பயிற்றி இசைத்தமிழைக்
...டுக்குள் ளாக்கும் கெடுமனத்தைத்தான்புதைக்கக்
...ட்டுக்குள் ஆவி கொடுப்பேனென் றன்னவர்முன்
...காட்டுக் குயிலே, நீ கூவு!

...த்த கலைகள் பொலிந்ததமிழ் நாட்டரங்கில்
...த்துக் கலையாங் குரங்காட்டம் காட்டுவர்க்கே
...த்துந் தமிழ்க்கூத் திளமயிலே, எந்தமிழைக்
...த்த நடமாடிக் காட்டு!



1—1

கட்டுரை, கதை, பாட்டு எழுதுவார் கருத்துக்கு.

தென்மொழிக்கு அன்பர், மாணவர் பலரிடமிருந்தும் கட்டுரை, கதை, பாட்டு முதலியன அளவிறந்து வந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் அளவு கண்டு மகிழ்வும், உட்பொருளும், நடையுங் கண்டு வருத்தமும் அடைகின்றோம். வருகின்ற உருப்படிகளுள் பாட்டுக்களே மிகுந்திருக்கின்றன. அவை முற்றும் பிழைபட்டிருப்பதுடன், உயர்வான கருத்துக்களையும், தம்முட் கொண்டிராமல் விளங்குகின்றன. சிலர் அளவிறந்த பக்கங்களில் எழுதிக் குவித்திருக்கின்றனர். தென்மொழியில் மூன்று நான்கு பக்கங்களுக்கு மிகாமல் எழுதுமாறு அவரைக் கேட்டுக்கொள்கின்றோம். மேலும் அவர் கீழ்வருவனவற்றையும் கருத்திற்பதிக்க வேண்டுகின்றோம்.

1. மாணவரும், பிறரும் எழுதும் உருப்படிகளை ஆங்காங்குள்ள நல்ல தமிழ் ஆசிரியரிடமும், தமிழ் அறிஞரிடமும் காட்டிச் செம்மை செய்யப்பெற்று அனுப்புதல் வேண்டும்.
2. அனுப்பியவுடனேயே தென்மொழியில் வராமையால் கவலுற வேண்டாம். நல்ல உருப்படிகள் காலந் தாழ்ந்தேனும் உறுதியாய் வெளிவரும்.
3. தென்மொழியில் வாராதனவும், திருப்பிப்பெறப் போதிய அஞ்சற்றலை வைக்கப்பட்டனவும், உடனுக்குடனன்றியேனும், எவ்வாறாயினும் அவற்றை எழுதிய ஆசிரியர்க்கு வந்தே சேரும்.
4. [illegible]
5. [illegible] கட்டுரை, கதை, பாட்டு [illegible]
6. [illegible] கட்டுரை, கதை, பாட்டு [illegible]

[illegible]

தென்மொழி
இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

இயல் 1 : | திருவள்ளுவராண்டு 1990 புரட்டாசித்திங்கள் 15. (1—10—59 | இசை 5

நாடும் மக்களும்.

"நாடென்ப நாடா வளத்தன"- என்றார் பொய்யா மொழியார். மக்களெல்லாம் தம் உயிர் வாழ்க்கைக்கு வேண்டியவற்றை வேறெங்கும் நாடிப்போகாமல், தன்னகத்தேயே வளம் கொழுவியதாய் அமைந்த ஒரு நிலப்பரப்பே, நாடு எனப் பெயர் பெறுவதாகும். ஆனால் இத்தகைய இயற்கைவளம் பொதுளியதாய் அமைந்த ஒரு நாடு, இக்கால் உலகில் வேறெங்கும் இல்லையாயினும். நம் பண்டைத் தமிழகப் பகுதி அவ்வாறிருந்தது என ஓங்கிப் பேசலாம்.

'உழவர் உழாதன நான்கு பயனுடைத்தே'- எனக் கூறி மாரி வண்கைப் பாரி யாண்ட பறம்பு மலை இயற்கை வளம் மிக்கதாய் இருந்தது என்றார் கபிலர். ஆயினும் அத்தகைய வளங்கனிந்த நாட்டை, நாம் காண்பதற்கரிதெனினும், அவ்வாறு வளம்மிக்கதாய் ஆக்கிக்கொள்ள வல்ல அறிவாற்றல் மிக்கோர் பலரும் உள்ளனர். அவ்வறிவாற்றலிற் சிறந்தோரை நாம் ஆளுநராகக் கொள்வோமாயின். நாமும் அவ்வளம் சான்ற நாட்டில் வதிந்து, வாழ்வை நுகரலாகும்.

இனி இத்தகைய நாட்டை உண்டாக்க ஆளுநருமே அன்றி. மக்களும் உயர்ந்தோராய் இருத்தல் வேண்டும்.

நாடாகொன்றே காடாகொன்றே
அவலாகொன்றே மிசையாகொன்றே
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே
(புறம்)

என்றார் ஔவை மூதாட்டியாரும். நாடாகட்டும் காடாகட்டும், பள்ளமாகட்டும், மேடாகட்டும் எங்கு மக்கள் நல்லவராக உள்ளனரோ, அந்த நிலமே நல்ல நாடு என்பது அவர் கருத்து.

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

என்று முதுமொழிக்காஞ்சி முழங்கும்.

ஒரு நாட்டின் பெருமைக்கு முதற்பெருங் காரணமாய் நிற்போர் அந்நாட்டு மக்களே.

பொய் அறியா வாய் மொழியால்
புகழ் நிறைந்த நல் மாந்தரொடு
—(மதுரைக் காஞ்சி)

விளங்கும் நாடே நாடெனப்படும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பால், அவன் ஆண்ட உறையூரைப்பற்றி வெள்ளை நாகனார் என்னும் நல்லிசைப் புலவர்,

"அரசெனப் படுவது நினதே பெரும!
....
நாடெனப் படுவது நினதே!—என்று பாடிப் பரவுகின்றார்.

அத்தகைய நன்மக்கள் வாய்ந்த ஒரு திருநாட்டை, அரசும் நெறி திறம்பாமல் ஆளல் வேண்டும்.

"அறநெறி முதற்றே யரசின் கொற்றம்!
அதனால் நமரெனக் கோல் கோடாது
பிறரெனக் குணங் கொல்லாது
ஞாயிற் றென்ன வெந்திற லாண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்" (புறம்)

உடையராய் ஆளுநர் இலங்கவேண்டும்.

"யான் உயிர் என்பது அறிகை
வேல் மிகு தானை வேந்தர்க்குக் கடனே"

என்று பண்டைத் தமிழரசர் எண்ணி,

"முதுவோர்க்கு முகிழ்ந்த கையினராகவும்
இளையோர்க்கு மலர்ந்த மார்பினராகவும்
ஏரோர்க்கு நிழன்ற கோலினராகவும்
நேரோர்க்கு அழன்ற வேலினராகவும்

—(சிறுபாணாற்றுப்படை)

ஊரை ஆண்டுத் தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனர். தண் டமிழ்ச்சான்றோர் பல்கிய பண்டைத் தமிழரசு அவ்வாறிருந்தது.

"அரசியல் பிழையாது அறநெறிகாட்டி,
பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது"

நடப்பதாகி,

(மதுரைக்காஞ்சி)

முறை வேண்டுநர்க்கும்
குறை வேண்டுநர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கருளி

(பெரும்பாணாற்றுப்படை)

நீர் சூழ் தமிழகத்தைச் சீர் சூழ்ந்த தாக்கிய பண்டை அரசின் கீழ்தான், மாந்தர் இன்புற்று வாழ்ந்தனர். இவையெல்லாம் பழங்கதை!

இற்றைத் தமிழரசோ, ஒழுங்கற்றார் கையிற் றங்கியது. மக்கள் நலங்கருதாது, தன்னலங் கருதுவார் புன்புறத்திற் போயொடுங்கியது. இதுவேயுமன்றி, மக்களும் அரசு பிறழ்ந்த அடிவழித் தாமும் பிறழ்ந்தனர். மேனாட்டாரிடமிருந்து கற்க வேண்டுவன கல்லாது, கற்கக் கூடா நாகரிகமெனனுங் கொடு வழிபற்றிக்குலைந்து போகின்றனர் மக்கள்.

"இல்லது நோக்கி இளிவரவு கூறுமுன்
நல்லதுவெஃகி வினை செய்வாரையும்"

(—பரிபாடல்)

"இலனென்னும் எவ்வம் உரையாமுன்
ஈயுங்" குணமுடையாரையும் காண

ஆவலாகவிருக்கின்றோம்.

"கொள்வதும் மிகை கொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது" (பட்டினப்பாலை)

வாழும் வணிகரைக் காணேம்.

'அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகிச்
சிறந்த கொள்கை அறங்கூறும்''
(—மதுரைக்காஞ்சி)

அவையத்தைப் பார்க்கவும் கேட்கவும் விருப்பமுடையவராகித் தேடுங்கால், பொய்மையும் புலையும், வெய்யச் சூழ்வும் கொண்ட அறமன்றம் நம் கண்களிற் படுகின்றது.

இத்துணை ஏற்றத் தாழ்வுக்கும் காரணம் என்னே? என்னே? என்று கடாவுவாரையும், கவலுறுவாரையும் கூடக் காணவியல வில்லை. ஊன்றிப் பார்க்குங்கால் நமக்குக் கிடைத்த முடிபுகள் இரண்டு.

இற்றைத் தமிழகத்தில்,

அரசுக்குத் தக்க குடிகளில்லை!
குடிகளுக்குத் தக்க அரசில்லை.

இவ்விரு குறைகளுள் ஒன்று நிறைவாயிருப்பினும் காட்டரசாகவோ, அன்றி நாட்டரசாகவோ இஃது இயங்க முடியும். ஈண்டோ, காடுமல்லாது, நாடுமல்லாது, மாக்களும், மக்களும் புகுந்த காடுங் கழனியுமாக வன்றே காண்கின்றேம். நல்ல மக்கள் நல்லாட்சியை அமைத்தல் இயலும். அல்லது, நல்ல ஆட்சி, நல்ல மக்களை, ஆக்கலும் இயலும். ஈண்டு நாம் பெற்ற தன்னரசாட்சியில் மக்களே ஆள்நரைப் பொறுக்கு வதால் நல்ல ஆட்சி அமையாமைக்கும் அவரே காரணமாவார். இதற்குக் கல்லாமையைக் காரணங் காட்டுவாருமுளர்.

அதுவும் ஒரு காரணமேயன்றி, அதுவே முழுக் காரணமாகாதென்போம். அதற்கு வலித்தமும் காட்டுவோம்.

கல்லாதவர் பெருகியிருப்பதாலேயே ஆள்நரைத் தெரிந்தெடுக்க இயலாதவராய் மக்கள் இருக்கின்றனர், என்பது உண்மையாயின் கற்றவர் என்பார் எல்லோரும் ஒழுக்கமுடைய வராயும், நெறியுடையவராயும், பிறர் நலம் பேணும் பெற்றிய ராயும் இயங்குகின்றனரோ? அவ்வாறில்லையே! கற்றவரில் நூற்றுக்குப் பதின்மர் தாமும் அவ்வாறில்லாதிருக்கக் கல்லா மையே ஆட்சிச் சிறப்பின்மைக்குக் காரணமாவ தெங்ஙன்?

(தொடர்ச்சி 35-ம் பக்கம் பார்க்க)

பெண்ணை நாட்டின் பழம்பொருள்கள்.

பண்டாரகர் (Doctor) மா. இராசமாணிக்கனார் எம் ஏ., எம். ஓ எல்.

முன்னுரை:

தென்பெண்ணையாறு மைசூர் நாட்டில் நந்திதுருக்க மலைத்தொடரில் தோன்றிச் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கிருட்டிணகிரி வட்டத்திலும் வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த செங்கம் வட்டத்திலும், தென்ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளக்குறிச்சி, திருக்கோவலூர், விழுப்புரம் கடலூர் வட்டங்களிலும் பாய்ந்து, கடலூருக்கு வடக்கே நான்கு கல் தொலைவில் வங்கக்கடலில் கலக்கிறது. இதன் நீளம் 260 கற்கள். இப் பேரியாறு பாய்ந்து வளமாக்கும் நாடு **பெண்ணை நாடு** என்று கூறுவது பொருத்தமாகும். பெண்ணை நாட்டில் செங்கம் வட்டத்திலும் திருக்கோவலூர் வட்டத்திலும் **புதிய கற்கால மக்கள்** வாழ்ந்தமைக்குரிய சான்றுகள் கிடைக்கின்றன. அவற்றை அறிவதே இக்கட்டுரையின் நோக்கம்.

கற்கால மக்கள்.

செங்கம் வட்டத்தைச் சேர்ந்த கல்ராயன் மலைகளில் கல் உளிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அம்மலைகளில் இன்று வாழும் மக்கள் அவற்றை அன்பும் அச்சமும் தோன்றத் தம் கோயில்களில் வைத்து வழிபடுகின்றனர். இவற்றை நோக்க, கற்கால மக்கள், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அம்மலைப் பகுதிகளில் வாழ்ந்தனர் என்று கொள்ளலாம்.

கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள குண்டலூர், கொங்கராய பாளையம், குகையூர் என்னும் இடங்களிலும், திருக்கோவலூர் வட்டத்தில் சம்படை என்னும் இடத்திலும் பண்டை மக்கள் புதைக்கப்பட்ட இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரு குழி ஆறடி நீளம், நான்கடி அகலம், மூன்றடி உயரம் கொண்டுள்ளது. அதன் மேற் பகுதியிலும் அடிப் பகுதியிலும் நீண்ட பெரிய கற்பலகைகள் காணப்படுகின்றன. அதனைச்சுற்றிலும் வட்டமாகக் கற்பலகைகள் மண்ணுள் புதைக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன. குழியின் உட்பகுதியில் எலும்புத்துண்டுகள், மட்பாண்டங்கள், இரும்புக் கருவிகள் காணப்படுகின்றன. அவை முறையே இறந்தவர் உடம்பிலிருந்த எலும்புத் துண்டுகளும், இறந்தவர் பயன்படுத்திய மட்பாண்டப்

பொருள்களும், இரும்புக் கருவிகளும் ஆகும். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர்ப் புதைகுழிகளில் கிடைத்தவை போலவே இப்பொருள்களும் காணப்படுகின்றன. எனவே புதிய கற்கால மக்கள் அப்பகுதிகளில் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். திருக்கோவலூர்க்கு அருகில் உள்ள தேவனூர், கொல்லூர் என்னும் இடங்களில் இப்புதைகுழிகள் மிக்குள்ளன. அவைபற்றிய விரிவுகளைக் கீழே காண்க.

தேவனூர்:

இது திருக்கோவலூர்க்கு வடமேற்கில் பெண்ணையாற்று வடகரையில் இரண்டு கல் தொலைவில் உள்ளது. இவ்வூரில் பண்டைமக்கள் அடக்கம் செய்யப்பெற்ற புதைகுழிகள் நிலத்திற்கடியில் காணப்படுகின்றன, அவற்றுள் சிலவற்றை ஆராய்ச்சியாளர் அகழ்ந்து ஆராய்ந்தனர். பதினென்கடி நீளம், எட்டடி அகலம், அரையடிப் பருமம் உள்ள பாறைக்கல் ஒரு பிணக்குழியின்மீது மூடப்பட்டிருந்தது. அக்குழி நாற்கோண அறைபோல் அமைந்தது; நாற்புறமும் கற்பலகைகளால் மூடப்பட்டது; ஒவ்வொரு குழியின் கிழக்குப்பக்கப் பாறையில் ஒரு சிறிய வட்டவடிவமான துளை காணப்படுகிறது. அக்குழிகள் உள்ள இடம் பெண்ணையாற்று வெள்ளத்திற்கு உட்பட்டிருந்தமையால், காலப்போக்கில் அவை தரையில் ஆழப்பதிந்து விட்டன என்று நிலநூல் வல்லார் கருதுகின்றனர். இப்பொழுது அவையுள்ள நிலங்களில் புஞ்சைப் பயிர்கள் வைக்கப்படுகின்றன. அந்த நிலங்கள் உழப்பட்டுவந்ததால் நாளடைவில் பல புதைகுழிகள் அழிந்துவிட்டன.

1865-இல் ஃசெ. எச். கார்ஃச்டின் என்பவர் சில புதை குழிகளை ஆராய்ந்தார். ஒவ்வொன்றிலும் எலும்புத்துண்டுகள், இரும்புத் துண்டுகள், பருத்த களிமண்ணால் செய்யப்பட்ட பிணப்பெட்டி முதலியன இருந்தன, அப் பிணப்பெட்டியின் நீளம் நான்கு அடி; அகலம் பதினைந்து விரற்கடை; உயரம் ஒன்பது விரற்கடை. அதனைப் பதினைந்து மட்கால்கள் தாங்கியிருந்தன. புதை பொருள் ஆராய்ச்சியாளரான திரு. ரீ என்பவர் 1877-இல் இத்தகைய புதைபொருள்களைப் பல்லாவரத்தில் கண்டெடுத்தார். பிணப் பெட்டிகளின் அடியில் வரிசைக்கு மூன்று ஆக ஐந்து வரிசைகளைக் கொண்ட மண்கால்கள் இருத்தலைத் தேவனூர்ப் புதைகுழிகளில் இன்றும் காணலாம். ஆயின். அவை தாங்கியிருந்த பிணப்பெட்டிகள் கலப்பையில் அடிபட்டு

அழிந்துவிட்டன. அப் புதைகுழிகளில் மட்பாண்டங்களும் கிடைக்கின்றன, ஒரு புதைகுழி மேட்டு நிலத்தில் இருப்பதால் அழிக்கப்படாமல் இருக்கிறது. அதன் நீளம் பதின்மூன்றரை அடி; அகலம் 9 அடி 8 விரற்கடை; அக்குழியின் ஒவ்வொரு பக்கத்தையும் தனிக் கற்பலகை மூடிக்கொண்டு இருக்கிறது. அவ்வாறே குழியின் அடியிலும் மேலும் தனித்தனிக் கற்பலகைகள் காணப்படுகின்றன.

கொல்லூர்:

இஃது ஒரு சிற்றூர். இது தேவனூர்க்குக் கிழக்கில் மூன்று கல் தொலைவில் உள்ளது. இங்கும் தேவனூரில் உள்ளது போலவே வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட புதைகுழிகள் இருத்தலை ஆராச்சியாளர் கண்டுபிடித்து உள்ளனர், சிறியவையும் பெரியவையுமான மட்பாண்டங்களும் இப்புதைகுழிகளில் கிடைத்துள்ளன. பெரிய கோலி உருண்டையின் அளவுள்ள மட்பாண்டம் முதல், பல அறுபட்டில் (Gallon) தண்ணீர் கொள்ளக்கூடிய பெரிய மட்பாண்டம் ஈறுகப் பலவகை மட்பாண்டங்கள் அங்கு இருந்தன. அவை சிவப்பும் கறுப்பும் கலந்த நிறத்தவை; உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் வழ வழப்பு உடையவை,

இவை **புதைகுழிகள்** என்பதை ஊரார் ஒப்புவதில்லை. அதனுல் இவைபற்றித் தாம் கேட்டுவந்த செவிவழிச் செய்திகள் பலவற்றைக் கூறுகின்றனர். (1) சாலிவாகன ஆண்டளவை தொடங்கும்போது நெருப்பால் மக்களுக்கு அழிவு நேரும் என்பதை முன்னரே அறிந்து, அவ்வழியிலிருந்து தப்புவதற்காக இக்குழிகளை அக்கால மக்கள் அமைத்தனர் என்று சிலர் கூறுகின்றனர். (2) அவை பண்டைக்காலத்தில் வாழ்ந்த குள்ள மாந்த இல்லங்கள் என்று வேறுசிலர் கூறுகின்றனர். (3) அவற்றில் பாண்டவர் வாழ்ந்தனர் என்று பின்னும் சிலர் பேசுகின்றனர். (4) பழங்காலத்தில் வாழ்ந்த வேடரும், குறும்பரும் கொடிய விலங்குகளின் தாக்குதலிலிருந்து தம் மனைவியரையும், மக்களையும் காக்க இவற்றை அமைத்தனர் என்று மேலும் சிலர் மொழிகின்றனர். (5) பண்டைக்கால மக்களுள் மிக்க முதுமை அடைந்தவர் தம் இறப்புக்குமுன் ஓய்வாகத் தங்கியிருந்த இடங்கள் இவை—அதனுற்றான் ஒவ்வொரு குழியிலும் அவர்தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் பிணப்பெட்டியும் வைக்கப்பட்டன என்று வேறு சிலர் பேசுகின்றனர். (6) இராமன் காலத்தில் வாழ்ந்த மாந்தக் குரங்குகளின் இருப்பிடங்கள் இவை என்று மற்றும் சிலர் உரைக்கின்றனர். இவை 'வாலிக்கிலியர்' என்ற ஒருவகை மக்களின் இல்லங்கள் என்று திருக்கோவலூர்த் தலபுராணம் செப்புகிறது. * *

அழகு.

அழகைக் காணவும் கண்டு மகிழவும் மூலப் பொருளாய் நிற்பது கண்.

கண்ணில்லாவிடின் புற அழகு இருளே!

கண் அழகுக்கு வித்தாகவும், அழகுக்கு எடுத்துக் காட்டாகவும் உள்ளது.

வானத்தில் சூழ்ந்துகிடக்கும் நீலவண்ணம் கண்ணிலும் தேங்கிக் கிடக்கின்றது.

குளத்தைச் சுற்றி நீண்டு வளர்ந்த செழும் புற்கள் நிற்பது போல் கண்களைச்சுற்றி ஒழுங்குற இமைகள் நிற்கின்றன.

மூக்குத் தண்டிற்கும் கடைக் கண்ணிற்கும் நீந்தி வருகின்ற கெண்டை மீனாய் ஒளிவிடுகின்றது வெள்ளை விழி.

நடுவில் ஒரு கருமைப்பொட்டு
அழகு குனிந்து செல்லும் கருவட்ட வாயில்!
கண் அழகு! அதன் அசைவு அழகு!

அதன் இமைப்பு அழகு! அழகு கண்ணில் ஆடுகின்றது
நெளிகின்றது; தூங்குகின்றது; ஒளிவிடுகின்றது;

வேட்கைப் பொருள்கள் எல்லாம் அழகு பிழம்பாகவே காட்சியளிக்கின்றன.

கண்ணால் கண்டு நுகரக்கூடிய பொருள்கள் அனைத்தும் அழகே!

வான் அழகு! மலை அழகு! நிலம் அழகு! நீர் அழகு!
கடல் அழகு! கனல் அழகு! வண்ணங்கள் அனைத்தும்
அழகு! அழகு ஒரு ஒளி! அது புல்லாயும்
செடியாயும் கொடியாயும் மரங்களாயும் பரந்து கிடக்
கின்றது.

ஆண் அழகு! பெண் அழகு! குழந்தை அழகு!
பறவைகள் விலங்குகள் எல்லாம் அழகே!

அழகு ஒரு ஒழுங்கு!
வளைவில்லாத நேர்கோடு அழகு! ஒரே வகையாக
நெளிந்து செல்லும் வளைவுகோடு அழகு! வளைவு அழகு!
நீண்ட வளைவு அழகு! நாற்கோணம் அழகு!
நீண்ட நாற்கோணம் அழகு! முக்கோணம் அழகு!
புள்ளிகள் அழகு!
நேராய் வளர்ந்த தென்னையும் பனையும் அழகு!
நெளிந்து வளர்ந்த புன்னையும் மாவும் அழகே!
கூர்செய்த வேல் அழகு! குனிந்த வில் அழகு!
உருளை அழகு! திரட்சி அழகு!
வீழ்ச்சி அழகு! எழுச்சி அழகு!

() () ()

அழகு என்பது அறிவு!
அறிகின்றவன் அழகை நுகர்கின்றான்.
அழகை நுகர்பவன் அறிகின்றான்.
பேசுவது அழகு! நடப்பது அழகு!
பிணைவது அழகு! நடிப்பது அழகு!
அமர்வது, எழுவது, படுப்பது, ஓடுவது, ஆடுவது,
நகர்வது, நடுங்குவது, நிமிர்வது, நிலைப்பது
எல்லாம் அழகு!

பிறப்பு அழகு! இறப்பு அழகு!
வாழ்வு அழகு! தாழ்வு அழகு!
திசைகள் அழகு! வான் வெளி அழகு!
மேடு அழகு! பள்ளம் அழகு!
விழிப்பு அழகு! தூக்கம் அழகு!
தொடல் அழகு! விடல் அழகு!

காக்கை அழகு! கழுதை அழகு!
புழு அழகு! பூச்சி அழகு!
மலர் அழகு! இலைகள் அழகு!
சருகு அழகு! குச்சிகள் அழகு!
காய் அழகு! கனி அழகு!

() () ()

மதி, ஞாயிறு, அழகு! ஒளி அழகு! இருள் அழகு!
அழகற்ற ஒரு பொருள் எங்கும் இல்லை!
கண்—கண்ட பொருள் அனைத்திலும் அழகு கூத்திடுகின்றது!

— மெய்மைப்பித்தன் —

என்றையோ?

— துரை மாணிக்கம் —

கேட்டியோ தோழி, வாழி! நாட்டிடை
மேட்டிமைச் சான்ருேர் மெய்வழிப் பிறழ்ந்தரோ?

ஓரக மகளிர் உயர்நா ணுகுத்தே
ஊராகச் சீர்மை ஒழுங்கூழ்த் தனரோ?

கெழுதகை ஈகையர் கேடுபட் டாங்கே
இழிதகைப் பட்டரோ? எவண் எவண் காண்புழி

பொய்யும் புலேயும், கைவலித் தீதும்
வெய்யச் சூழ்வும், வெறிவினே மிகுவும்

ஏழ்மையும், புன்மையும் ஏற்றமில் வாழ்க்கையும்,
தாழ்மையும், காழ்ப்பும், தாய்மொழிப் பாழ்மையும்

பிறருயர் வழிக்கும் பேதைப் பெற்றியும்
நறவுக் குடத்துள் நச்சுப் பெய்தென

நல்லோர் ஆயத்துப் புல்லோர் மிகுத்தே
அல்லோர் பல்க அருந்துயர்ப் பட்டு

மாய்தல் என்னேயோ? நன்னெறி
பாய்தல் என்றையோ பழிநீங்கி யிவணே!

உயிர் வாங்குவன்.

தாய்க்குறின் கேடே தழற்படு முளமே!
சேய்க்குறின் தீங்கே விழிநீர்ப் படுமே!
கேட்டீ எலுவ! நாட்டுத் துயர்தரின்
ஈட்டி யாயினும் எந்தோள் அடுமே!
பல்லா யிரமாண் டுயர்வழி பயின்ற
செல்லா நல்லிசை வெல்லத் தமிழ்மொழிக்
கொருவன் இழிசெயின் நெறியிகந்
தருமுயிர் வாங்குவ னவ்விடத் தானே!

○ ○ ○

கைம்மை மந்தி.

கணவனைப் பிரிந்து வாழ்வதும் ஒரு வாழ்வோ? அவனழகு கண்டு, அவன் மொழி உண்டு, அவன் பரந்த மார்பிற் புரண்ட பேரின்பம் தன் உள்ளத்தை நாளும் தின்றுகொண்டிருக்க, உண்கையில் தான் அவனொடு உண்டது எண்ணி வருந்தியும், தான் பாயலிற் சாய்ங்கால், அவனொடு படுத்து மகிழ்ந்த தெண்ணிக் கவன்றும், அவன் நுகருமாறு தான் அணிந்து மகிழ்ந்த மலரை ஈண்டு வெறுத்தொதுக்கியும் உளம் நொந்து சாகின்ற கைமை வாழ்வினும், வெய்ய வாழ்வு வேறுண்டோ. இதுபற்றியன்றோ இளங்கோவடிகளும்.

'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்'

என்கிறார். மகவிழந்து துடிக்கும் மங்கையிடம், மற்றொருத்தி "அம்மா உன் மகவு இறந்ததென வருந்துவ தொழிக! இதோ என் மகவை உன் மகவாக எண்ணிக்கொள்" என்றியம்பி ஆறுதல் தருதலும்; உடன் பிறப்பை இழந்து துடிப்பார் முன் "வருந்துவது ஒழிவீர்! உங்கள் உடன் பிறப்பைப் போலும் என்னைக் கருதிக் கொள்வீர்" என்றலும்; பெற்றோர்த்துறந்து கவலும் ஒரு பிள்ளையிடம் போய் "அழுதல் வேண்டாம் என்னை உன் அன்னையாகவும் தந்தையாகவும் எண்ணிக்கொள்" என்றலும் ஒருகால் இயலினும் இயலும்; ஆயின் கணவனை இழந்து துடிக்கும் ஒரு குல நங்கையிடம், "நீ வருந்தாது ஒழிக! என்னை உன் கணவனாக எண்ணிக்கொள்" என்று ஒப்புக்காட்டி இயம்புதல் எவ்வாற்றானும் இயலாத தொன்றென்றறிந்தே, அடிகள்,

"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்" என்கிறார்.

இனி அத்தகைய கைமை வாழ்வை மாந்தர்குல மகளிரேயன்றி, விலங்கும் வெறுத் தொதுக்கிய காட்சி யொன்றினைக் குறுந் தொகையில் ஓரிடத்தே காணலாம்.

தலைவியைப் பிரிந்து போகும் காதலனிடம் அவன் போய்த் திரும்பி வராதவழித் தன் தலைவி மிக வருந்த நேரும் என்பதைத் தோழி இயம்புவதாக அமைந்த பாடல் அது.

'நீ சென்று நள்ளிரவில் வருவாயாக! அவ்வாறு வாரா தொழிகுவையாகில் தலைவியும் அவள் வருந்துவதால் யானும்,

மிகவும் வருந்த நேரும்' என்று இயம்புகின்றாள். இவ்வாறுகூற நேர்ந்த அவள், அதை அவ்வாறே கூறின், அவன் ஒருகால் மறப்பினும், மறக்க நேருமென்றெண்ணி, அவன் மறக்காத காட்சி யொன்றினைக் கூறி, அதன்பின் இந்தச் செய்தியினையும் இணைத்துப் பேசுகின்றாள். அவ்வாறு அவள் காட்டிய காட்சி அவன் காணாத தொன்றாயிராமல், அவன் வாழும் மலையடுக்கத்திலேயே நிகழுவதாகக் காட்டி, அவனும் அதை அறிந்திருக்க நேரும் என்பதையும் குறிப்பாக அறிவிக்கின்றாள்.

''ஓங்கி நின்ற மலைக்தொடர் அடுக்கடுக்காக அமைந்து கிடக்கின்றது. தன்னைவிட்டு நீங்காத பெற்றித்தாய தன் காதலனாகிய ஆண் குரங்கு தன்னைத் தனியே வருந்துமாறு விட்டு விட்டு இறந்து போனது. அப்பிரிவாற்றாத அன்புடைய அதன் காதலியாகிய மந்தி, கணவற்றுறந்து தனியே வருந்திக் கைம்பெண்ணாக வாழ விரும்பாது, உயர்ந்து வளர்ந்த வன்மையான பறழ் மரத்தின் உச்சிக்கிளையேறி அங்கிருந்து அம்மலையடுக்கத்தின் நடுக்குறு சாரலில் பாய்ந்து தன் உயிரை மாய்த்துக்கொண்டது. இத்தகைய காட்சி நடைபெறும் சாரலையுடைய நாட்டை உடையவனே! நீ, நள்ளிரவில் வாரா தொழிகுவையாயின் யாம் மிகவும் வருந்துவோம்'' என்பதாகத் தோழி கூறுவதைக் காண்கின்றோம்.

இனி இந்தக் காட்சியை ஏன் காட்டினள் என்னின், அவ்வாறு அவன் பொருட்டு நேரும் பிரிவால் வரும் பெருந்துன்பம் தலைவி தன்னுயிரை மாய்த்துக் கொள்ளவும் காரணமாக அமைந்துவிடுமென்றும் முன்னறிவிக்கின்றாள் என்க. அவ் வழகிய பாடல் இது.

கருங்கட் தாக்கலை பெரும் பிறதுற்றென
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி,
ஓங்கு வரைஅடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சாரல் நாட! நடுநாள்
வாரல்; வாழியோ! வருந்துதும் யாமே!

– குறுந்தொகை. 69 –

(கடுந்தோட்கரவீரன் பாட்டு).

— பாவுண்தும்பி —

LOVE MEASURED

Bigger than the earth,
Vaster than the sky
and deeper far than
the deepest of the seas,
is my lover for him
who's the lord of the hills,
where from the black stemmid
'Kurinchi' flowers.
The bees gather nector
for their honey combs

(Kurunthogai. 3)

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவின்றே—சாரல்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

(குறுந்தொகை—3)

ஆங்கில ஆக்கம்: மா, இலெனின் தங்கப்பா. பி. ஏ,, பி. டி.

ஆக்க உரிமை: த. கோவேந்தன்.

*　　*

கருத்துக் கோவை.

அறிவியலும் கலையும்

உள்ளதை உள்ளவாறு அறிவிக்க முயல்வது அறிவியல். உள்ளதை உணர்ந்தவாறு உணர்த்துவது கலை. கருவிகளால் அளந்து வரையறுத்துக் கூறுவது அறிவியல். அவற்றைப் பற்றி கவலைப்படாமல் உணர்ச்சியால் வாரிவழங்குவது போன்றது கலை. அறிவியலில் எல்லாப் பகுதிகளையும் விளக்கினுல்தான் தெளிவு பிறக்கும்; கலையில் எல்லாப் பகுதிகளையும் விளக்கினுல் சுவை குன்றும். அறிவியலால் பெறும் அறிவு மூளையின் ஒரு பகுதிக்கு விருந்தாகின்றது. பயின்ற பிறகு அதன் புதுமைத் தன்மையை இழந்து விடுகின்றது. ஆனுல், கலையுணர்ச்சியால் பெறும் நுகர்வோ மாந்தனின் உணர்வு முழுமைக்கும் விருந்தாகின்றது என்றும் அதன் புதுமைத் தன்மை நீங்குவதில்லை.

— மு. வரதராசனுர், எம். ஏ.

பாட்டின் ஆற்றல்.

எல்லா இலக்கியமும் புலவரின் முன்நுகர்ச்சியையே உணர்த்துவதாயினும், கதை, நாடகம் முதலியவற்றைவிடப் பாட்டு தனிச் சிறப்புடையது. கதை முதலியன, ஒருவரின் நுகர்ச்சியைப்பற்றிக் கூறுவன; பாட்டோ அந்த நுகர்ச்சியையே தருவது பாட்டில் அமையும் சொற்களின் ஒருவகை ஆற்றலால் அவ்வாறு செய்ய முடிகின்றது.

எல். ஆபர் குரோம்பி.

தனித் (தியங்குந்) தமிழ்.

விரும்பினுல் தமிழ் மொழி, தான் ஆளுகின்ற வடமொழிச் சொற்களை அடியோடு களைந்துவிட்டுத் தனித்தியங்குமென்பதன்றி நன்கு தழைக்கவுந் தழைக்கும்... நகர்ப்புறங்களில் வாழாது அயற்புறங்களில் வாழ்கின்ற மிகத்தாழ்ந்த வகுப்பார் பேசும் பேச்சு, சமற்கிருதம் கலவாமல் பண்டைய இலக்கியக் காலத் தமிழைப் பெரும்பான்மை ஒத்திருக்கின்றது.

—கால்டுவெல்.

பொது ம(க்)கள் நடை.

நல்ல செந்தமிழ் நடை, பொது மக்கட்குப் புரியாதே எனக் கருதி நடையைத் தாழ்த்தினுல், தாழ்த்தப்பட்ட நடை தானும் விரைவில் இன்னுந் தாழ்த்தப்பட வேண்டிய நிலை ஏற்படும். எனவே தாழ்ந்துபோவதற்கு எல்லை இராது.

– டாக்டர் அ. சிதம்பரநாதன்.

பேச்சே தேவை.

தமிழ் நாட்டில் பேச்சாளிகள் தாம் விளைகின்றனர். செயலாளிகளைக் காணேம். பேச்சு இவ்வளவு மலிந்து வேறு எங்கும் இருக்காது. அதுவும் செயல் திட்டமில்லாத வெறும் பேச்சாக இருக்கும். பேச்சும் தேவை என்கின்ருன் பிற நாட்டான். பேச்சே தேவை என்கின்ருன் தமிழ் நாட்டான்.

– கி. ஆ. பெ. விசுவநாதம்,

பின்னடைதல்.

எந்த நாடு தன் மொழிச் சுவையை உணர்தலிற் பின்னடைகின்றதோ அது மற்றையெல்லா வளங்களானும் பிற்பட்டதாகும்.

– பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்.

பசலை.

இக்காலத்து மணவாத இளம்பெண்டிர்தம் பெயர்கட்கு முன்னுல் குமரி என்ற சொல்லைச் சேர்த்துக்கொள்வதுண்டு. குமரி என்பது வடசொல். இதற்குக் கன்னி, நங்கை என்பன நேரிய தமிழ்ச்சொற்கள். பழங்காலத்தில் இளமையுடைய பெண்டிர் தம் பெயர்களின் முடிவில் பசலை என்ற சொல்லைச் சேர்த்துக்கொண்டனர். பசலை, இளமைக்குப் பெயர். இது கன்னிமைப் பருவத்தையும் குறிக்கும். கழகக் காலப் பெண்புலவர் பலரில், காமக்கணிப் பசலையார், போந்தைப் பசலையார், மாருேக்கத்து நப்பசலையார் என்ற பெயருடைய புலவர் இருந்தனர். இப் பெயர்கள் இத்தகையனவே.

தாய்மை

— ம. அரங்கநாதன். —

[இவ்வுலகின்கண் நன்மையென்றும், தீமையென்றும், மென்மையென்றும், வன்மையென்றும், இருத்தல் போலவே பெண்மை யென்றும், ஆண்மை யென்றும் இரு வேறு உணர்வு சான்ற உயிர்ப்பிரிவுகள் உள்ளன. நன்மை தீமையாகவும், தீமை நன்மையாகவும், மென்மை வன்மையாகவும், வன்மை மென்மையாகவும் மாறினுல் என்ன மாறுபாடு நிகழுமோ, அதே மாறுபாடு ஆண்மை பெண்மையாகவும், பெண்மை ஆண்மை யாகவும் மாறுவதால் ஏற்பட்டே தீரும்.

பெண்மை மென்மையாக விருப்பினும் ஆண்மையைப் படைக்கும் ஆற்றல் பெற்றது. அஃது மென்மையாகவன்றி வன்மையாக விருக்குமாகுல் ஆண்மையினும் விலங்குத்தன்மை பொருந்திய உயிர்களைப் படைத்துவிடும். அஃதேபோல் ஆண்மை வன்மையாக விருப்பினும், பெண்மையைக் காக்கின்ற மென்மையைப் பெற்றது. அஃதவ்வாறின்றி மென்மை யாக இயங்குமாயின் மென்மையினுந் தாழ்ந்த ஊர்வன, நகர் வன போல் எளிய உயிர்களைப் படைக்கவே துணை செய்யும் மாந்தர் இனம் மென்மையினும் தாழ்ந்த கோழை உயிரிகளாக வும், வன்மையினும் ஓங்கிய வி ல ங் கு க ள ா க வு ம், மாறு படாமல் பெருக வேண்டுமாயின் பெண்மை மென்மையாகவும் ஆண்மை வன்மையாகவுமே இயங்குதல் வேண்டும். இந்த நிலைகளினின்று அவை திரியுமாகுல் உலகம் விரைந்து அழிவு படும். இப்பாழ் நிலைகளில் வீழாமல் மாந்தரைக் காக்கும் பொருட்டே அவரால் உள்ளத்தின் உணர்வு மாற்றம் ஏற்படுத்திக்கொள்ள முடிவதாயினும், உடல் உணர்வு மாற்றம் ஏற் படுத்திக்கொள்ள முடியாதவாறு இயற்கையாகவே உறுப்பமைப் புக்கள் அமைந்திருக்கின்றன. பெண்மை நலஞ்சான்றவொருத்தி இயற்கையாகவே மகவுக்குப் பாலூட்ட வேட்கை கொள்ளு தலும், மகப்பேற்றைத் தாங்கிக்கொள்ள உள்ள, உடல், வன்மை பெறுதலும், ஆண்மை சான்ற ஒருவன் பெண்மைக்கு

எற்றென்று இரங்குதலும், இல்லறச் சுமையினைத் தாங்கிக் கொள்ளுமாறு உள்ள வன்மை பெறுதலும், ஊன்று நோக்கு வார்க்கு நாம் கூறியவை இனிதே புலப்படும்.

இக்காலத்துப் புன்மை நாகரீகப் போலிப் பகட்டின் தீக் கனல் பட்டுக் கருகிப் போந்த நலங்கள் பலவற்றுள் பெண்மை நலமும் ஒன்று. நிலவென்றும், மலரென்றும் கருதத்தக்க மட வார்தம் மென்முகம் குறுமயிர் அரும்ப, மேட்டு நிலம்போல் மென்றோல் வற்றிக் கிடப்பவும், நடையில் மிடுக்கும், பேச்சில் துடுக்குந் தோன்ற உடல் நலங் குன்றி உள்ளத்தே ஆண்மை சுரந்து, சேய்மையைப் பேணும் பெற்றியிலராகி, ஒளியிழந்தும் தாய்மைக்குல மகளிர் அழிந்து படுகின்றனர். அவ்வாறு சீர் தேயும் தாய்க்குலத்தின், எதிர்கால முணர்ந்து மேலோர் வருந்து கின்றனர். புலவர் நெஞ்சுநெக்குருகிக் கவல்கின்றனர். இத் தகைய அருள் உள்ளங் கொண்டு துயருறுவாரில் திருவாளர், **ம. அரங்கநாதனும்** ஒருவர்.

இனிமை கனியக் கனிய இவர் இப்பாடலைப் பாடிக்காட்ட செவி குளிரவும் உளங் குளிரவும் நாமிதனை மாந்தி, யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையம் என, ஈண்டு அதனை வெளியிடுகின் றோம்,

'ஒப்புரவு' என்னும் புனை பெயரிட்டுத் **'தாய்மை'** எனும் தலைப்பின் கீழ்த் **'தமிழ்ப் பொழிலில்'** (துணர் 33, மலர் 3, 4, 9, 10) இவர் எழுதிய ஐம்பது நறும் பாடல்களுள், பதினைந்தே ஈண்டுக் காட்டப்பெற்றன. முழுமையும் ஆண்டுக் காண்க.

இதனுள் காணும் கருத்துப் பொலிவையும் இசை இனிமை யையும், இதனை ஊன்றி நுகர்வோர் உணர்வார். இதன் நலங் கருதியும், **'தென்மொழி'** அன்பர் அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டியுமே இதனை மீண்டும் வெளியிடுகின்றோம்.)

(—ஆ-ர்.)

பூப்பெய்தி மணமுடித்து, மக்கள் தந்து
புகுந்தவிடத் தேகுடும்பப் பொறுப்பையேற்றுக்
கோப்பாகச் செல்வமெலாங் கண்டு, கொண்கன்
கொள்கைதனக் கேகுறுக்கே நில்லாளாகித்
தோப்பாக நிறைந்தவொக்கல் சூழ வாழ்ந்து
சோர்வின்றி மகவளர்த்துக் கல்வி தந்து,
காப்பாக நிறைகொண்டு வாழ்வுமுற்றிக்
கனிந்தாளோர் பெண்ணென்முற் கடவுளன்றோ.

அடிக்கொருகால் முள்தைத்தாற் போலே பெண்ணின்
அகவைசெலும் வழியெல்லாம் இடுக்கணன்றோ!
குடிக் கொருநல் விளக்காவாள் மாறிநின்றால்
குடைசாய்ந்த வண்டியெனக் குடும்பம் வீழும்.
நொடிக்காமற் கொண்டுசெலு மனையின்மிக்க
நுகர்விடமு முண்டோ? இவ்வுலகில் வாழ்வு
பிடிக்காமற் றுறந்தோரும் பெண்ணுலன்றோ?
பெண்ணலத்தின் வீறனைத்தும் பேசுவோமே.

பெண்ணினது மென்மையினைப் போற்றுநாடு
பெருந்துயரக் கடல்குளிக்கும்; பொதுமை என்றே
கண்ணிநெடு கால்பொருத்திக் காட்டல்போலே
கன்னியர்தம் கைகளிற்போர்க் கருவிதந்தார்;
மண்ணதிர வானதிரச் செய்யும் பெண்ணின்
மனநிறையை வளர்க்கின்ற மென்மைகண்டீர்;
முண்ணிறைந்த கள்ளியினைக் காவல்செய்ய
முல்லையினை வேலிவைக்கும் முறைமை யுண்டோ?

மேனியிலே மென்மை,நடை மென்மை, சொல்லில்
மென்மை,புரி செயலெல்லாம் மென்மை,யிந்த
நானிலத்தி லுயிர்க்குலங்க ளெல்லாங்காண்மின்
நன்றுகப் புரியுமிந்த மென்மைச்செய்தி;
ஆனிறுத்தி யேறுவைத்துக் காண்மினின்னும்
அரியேற்றைப் பெண்சியத் தமைப்பைக்காண்மின்,
தேனிருக்கும் மொழிக்குயில்மென் பூவை, கோழி,
செம்போத்துக் குழுவிலெல்லாம் பெண்மைவேறே.

ஆனிமிர்ந்து பாயுதலும், பெட்டைக்கோழி
அலறிவந்து கொத்துவதும் மகவைகாக்க,
ஞானிருந்த காவலுக்குள் பகைவந்தாக்கால்
தன்மையினைத் தணலாக்கித் தாக்கும் பெண்மை;
வானிருந்து மின்பிறத்தல் போலேமென்மை
வயிற்றிருந்து பிறக்குமந்த வாற்றல் கண்டும்
ஏனவர்க்குப் படைதந்தீர்? நீரே ஏந்தும்;
இருவிழிகள் போதாவோ எரியைக்கக்க!

நாணிருக்கும் பெண்முகத்தி லழகுமின்னும்!
நட்டாரை விட்டகலா நலத்தைப்பின்னும்!
மானமெனுங் குடிமைக்கோர் வாயிலாகும்,
வளமிதனை யில்லார்கள் வறண்டபாலை;
வாணிகர்த்த கண்ணூர்தம் நாணி னின்று
வழிவழியாய் வருங்குடிகள் மானங்காக்கும்;
ஆணிகர்த்தோ மெனப்பேசி நாணைவிட்ட
அடங்காத மங்கையர்தம் முகத்தைப்பார்மின்!

பெண்ணுக்காங் களையெங்கே, பெருமையெங்கே?
பேதமையாங் கரவில்லாப் பெற்றியெங்கே?
கண்ணுக்கே யொளியெங்கே? கள்ளநோக்குக்
காமுகரை யச்சுறுத்துங் கனல்தானெங்கே?
புண்ணுக்கே யீமொய்த்தாற் போலேயாண்கள்
புலனுக்கே விருந்தாகிப் போவாரன்றி,
எண்ணுக்கே யடங்காத வின்பமீந்தார்,
இல்லறத்தை வாழ்வித்தா ரென்பதாமோ?

தாய்க்குலத்தைச் சுடுசொல்லாற் றாக்கவில்லை,
தகவிழந்தா ரெப்பகுதி தனிலுமுண்டு;
மாய்க்கவரும் புலியதனைக் கிழிக்கவல்ல
மங்கையரு மிருக்கின்றார், வாழ்கஅன்னார்!
சேய்க்கினித்த பாலருத்தி யோடாய்த்தேய்ந்த
திருமகளிர் வாழ்கின்றார், சிறக்க வன்னார்!
போய்க்கேண்மின் நாணத்தின் பொலிவையந்தப்
பொற்றொடியார் கூறியுளம் பூரிப்பாரே.

எண்பதுக்கு மேலான தாயும்நாணம்
　　இருப்பதனைக் காட்டுகின்றார் செயலா,
　　　　　　　　　　　　　　　　　லின்னும்
கொண்கனையு மேறெடுத்துப் பாரார்வாழ்வில்
　　கொள்ளையின்பம் பெறுகின்ற மகளிருண்டு;
பண்புடைய ராயிவர்தாம் இருப்பதாலே
　　பறிகொடுத்தா ருரிமையினை யென்பதுண்டோ?
திண்புறுநற் செயலெல்லாம் நாணத்தாலே
　　செப்பமுறல் காண்கிலிரோ, தெளிகுவீரே.

தலைநாணித் தரைநோக்கி, யுடலங்குன்றித்
　　தாழ்ந்தகுர லாற்பேசி, யொசிந்துமெல்லக்
கலைநிறைந்த மதிமுகத்தில் உவகைமின்னக்
　　காலெடுத்து வைக்கின்ற மணப்பெண் காண்மின்!
மலைமுகட்டைப் போற்றலையை நிமிர்த்தி மிஞ்சும்
　　வாய்வீச்சு வீசி, யிரு கைகள்வீசிச்,
சிலைதொடுத்த வம்பென்னச் சென்றுமாலை
　　சேர்க்கின்ற பெண்ணிலையுந் தேர்ந்துபார்மின்!

சிற்றுடை கட்டியுடல் தெரியக்காட்டித்
　　தெருவில்வரு மளவுக்கு நாணமென்ற
வற்றாத பெருஞ்செல்வம் வற்றிப்போக
　　வளர்க்கினறேங் கலைகள்; திரைப் படங்கள்
　　　　　　　　　　　　　　　　　தாமே!
பற்றுக விளமைநலம் பாழாய்ப்போன
　　பாவையரைக், காளைகளைப் பார்மின்; மேலும்
முற்றுமல் பெண்குலத்தைக் காக்கவேண்டில்
　　முறையாக நாண்காக்க முனைகுவோமே!

தேனூற்றைப் போலொழுகும் பெண்மைப்பேச்சுச்
　　சிறைகடந்து போமாயின் செல்லுமாறு
கானூற்று வெள்ளத்தின் போக்கேயாகும்,
　　கட்டுக்கே யடங்காது சிறிதுபோதில்
தானூற்றல் குன்றிவெறி தாகித்தாழும்
　　தன்மையிது மென்மையினாற் சார்தலாகும்!
மீனூற்றல் நீர்நிலையிலன்றோ! பெண்வாய்
　　வீச்செல்லாம் நிறைகாக்கு மிடத்திற்றனே.

நடையடக்கி, நாவடக்கி, நலங்கள்தேக்கி,
நாகரிக மென்றுலகோர் நவிலுமின்னாள்
உடையடக்கி, பூநியத்துக் குயர்ந்துபோகும்
உணர்வடக்கி யறைப்பேச்சும் பலமாகாதே
மடையடக்கி யில்லறத்தை வளர்க்கும் பெண்ணை
வாழ்த்தாத நாடுண்டோ? வருந்தியீன்று
பெடையடக்கிக் குஞ்சுகளைக் காத்தல் போலே
பேணுதலாற் பெண்மைநலம் பிறங்குமன்றே!

வாய்த்தவயி றேடொருபெண் ணிருந்துபெற்று,
வாயூறுந் தாலாட்டிப் பாலூட்டிச்
சேய்கழிக்கு மலமெடுத்து, நறுநீராட்டிச்,
செய்வனவெ லாந்திருந்தச் செய்துகொண்கன்
போய்த்திரும்பு முன்னேநல் லுணவுமாக்கிப்
போட் டிருண்ட குழலிற்பூ முடித்துப், பிள்ளை
வாய்கிளர்ந்த மழலையுந்தன் னெழிலுந்தந்து
வளர்க்கின்று ளின்பமெலாம்! வளர்கின்றுளே!

வாளுறைக்கு ளிருந்தாற்போற் கூர்மையான
வாயுரையும் வேண்டுங்கால் வருதல்வேண்டும்;
கோளுரைக்கும் பழக்கத்தைக் கண்டபோதே
கொய்துவிட வேண்டு, மழ குமிழும் பெண்தான்
தாளிருந்தே யுச்சிவரை யணிகள் பூட்டித்
தற்பெருமை கொள்ளுதலைத் தவிர்க்கவேண்டும்!
நாளுக்கு நாள்விரைந்து வளரும் பெண்மை
நலம்நசுங்கிப் போகாமல் நாம் காப்போமே.

● ● ●

திருத்தம்.

(இசை 4, பக்கம் 5ல் மேலிருந்து கீழ் 10 அடியில் உள்ள 'ஓட்டைக் கட்டிலிலே' என்பதை 'ஓட்டைக் குடிசையிலே' என்று திருத்திப் படிக்க வேண்டுகின்றோம்.

— ஆ. ர்.)

(வலிந்துகொள்ளும் அளவுக்கு இக்கட்டுரைக்குச் சிறப்பான உட்பொருள் எதுவுமில்லை. தூங்குவோரை எழுப்புவதே இதன் நோக்கம்.)

வெளியே கூடும்போர்......

இரா. இராசதுரை.
கலை இளைஞன் இறுதி வகுப்பு.

'தம்பி! தம்பி!' என்ற குரல் கேட்டது. தம்பி இழுத்துப் போர்த்துக் கொண்டிருந்தான். தூக்கம்......!

'தமிழ்த்தம்பி! தமிழ்த்தம்பி!' என்று இன்னொரு முறை அழைத்தாள் தமிழ்த்தாய்.

தம்பி விழித்துப் பார்த்தான் — தலையணையிலிருந்து தலையைத் தூக்காமல், "என்ன?" என்று குழறியபடி கேட்டது அவன்வாய். தூங்கி இன்பங் கண்டவன் அவன். எழுப்பியவரை நோக்கினன் எரிக்கும் விழிகளோடு.

"தம்பீ! சேவல் கூவி விட்டது!" என்றாள் தமிழ்த்தாய்.

"ஓஹோ" என்றான் தம்பி. இழுத்து மூடிக்கொண்டான். வெளியே பெருத்த ஒலி. சேவல் கூவுமுன்பே விழித்துக்கொண்டவர் அங்கிருந்தார்.

"எதிரே தெரியும் நில முழுதும் என்னுடையது!" என்றான் ஒருவன். "இல்லை என்னுடையது!" என்றான் இன்னொருவன்.

"நான்தான் அந்த நிலத்தை நீண்ட நாட்களாக உழுது வருகிறேன்!" என்றான் இன்னொருவன்.

பேசியவர் எல்லோரும் முன்பே விழித்தவர்.

தமிழ்த்தாய் திரும்பவும் அறைக்குள்ளே போனாள். தூங்கிக்கொண்டிருந்த தம்பிகளத்தனைபேரையும் எழுப்பினாள்.

"தம்பீ! தம்பீ! நம் நிலமெல்லாம் பறிபோகிறது! வழி வழியாக மறம்பேசி வளம் பொங்க நம் முன்னோர் உழுத நிலமப்பா!

எழுந்திருந்து போங்கள்! உங்கள் வாழ்வையே சூறையாடச் சுற்றி நிற்கின்றன வல்லூறுகள்!" என்றாள்.

முதல்தம்பி எழுந்திருந்தான். ஒரு நீண்ட கொட்டாவி விட்டான். "அவன் நிலத்தை நெருங்க முடியுமா?" மறம் பேசுவதாக எண்ணிக்கொண்டு தூங்கி வழிந்துகொண்டே கேட்டான். திரும்பவும் படுத்துக்கொண்டான். தமிழ்த்தாய் போய் அடுத்தவனைத் தட்டி எழுப்பினாள்.

"தம்பீ! நிலமெல்லாம் பறிபோகிறது! ஊரெல்லாம் கட்டியாண்ட உன்தாத்தா ஈட்டி வைத்த செல்வம் அப்பா!"

அந்தத் தம்பியும் எழுந்து உட்கார்ந்து,

"உம்... நான் என் தாத்தாவின் பெயரனாயிற்றே! எவன் பக்கத்தில் வருவான்? என்றான். திரும்பவும் படுக்கையில் படுத்துக் கொண்டான்.

தமிழ்த்தாய் அடுத்தவனிடம் போய்த் தட்டி எழுப்பினாள். சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்த தம்பி சீறிவிழுந்தான்.

"அவனைத் தொட்ட கையாலா என்னைத் தொட்டாய்?"

"ஆம்!" என்றாள் தாய் படபடப்பாக. தன் கண்முன்பாகவே தன் செல்வம் பறிபோவதை விரும்பாதவள் அவள்,

"சேச்சே! கையை எடு! தீட்டு! தீட்டு!" என்று கத்தினான் தம்பி.

" அவன் உன் சொந்தத் தம்பியாயிற்றே!"

"பின்னே பக்கத்து வீட்டுக்காரன் சொன்னானே உன் தம்பியைத் தொட்டால் தீட்டு. "அவன் தாழ்ந்தவன் என்று."

அந்தப் பக்கத்து வீட்டுக்காரன் பார். வீட்டுக்கு வெளியே நம் நிலத்துக்கு உரிமை கொண்டாடுகிறான்.

"ஓஃகோ" என்ற தம்பி படுத்துக்கொண்டான்.

அடுத்தவனை எழுப்பினாள் தமிழ்த்தாய்,

"என்னம்மா தொந்தரையா?" என்று சீறினான் தம்பி.

"உன் நிலம் பறிபோகிறதப்பா! வட்டமிடுகின்றன வல்லூறு கள்!"

"இருந்தால் என்ன? அடுத்த வீட்டுக்காரன் இந்த நிலத்தில் எனக்குக் கொஞ்சம் பங்கு தருவதாக வாக்களித்திருக்கின்ருன்!"

"யார் நிலத்தை யார் கொடை தருவது?"

"போம்மா! உலகம் தெரியாதவள்! எனக்கு நன்மையைத் தானே நான் பார்ப்பேன்?"

அவனும் இழுத்துப் போர்த்துக்கொண்டான்.

தமிழ்த்தாய் குருதிக் கண்ணீர் வடித்தாள். தேம்பித் தேம்பி அழுதாள்.

"ஐயகோ! நம் நிலத்தைக் காக்க ஒருவருமில்லையா?"

ஒருவனும் விழித்துப் பார்க்க வில்லை. எல்லோருக்கும் தூக்கம். மீளாத தூக்கம் தூங்குவார் நிலத்தின் உரிமையைக் கவர வெளியே கடும்போர்! ஒருவன் கண்ணை விழித்தான். தன் உணர்வு வந்தது அவனுக்கு. ஐயோ நிலம் போகிறதே! பங்காளிகளே வாருங்கள்! தூங்கியது போதும்! இப்போது விழித்துக் கொள்ளாவிட்டால் இனிமேல் விழித்துக்கொள்ளமுடி யாது! எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்! கத்திக் கத்தி ஓய்ந்து போனுன் அவன். கத்தியதைக் கேளாமலே தூங்கியவர் சிலர். கேட்டும் கேளாதவர் போலிருந்தவர் சிலர். கேட்டும் புரிந்து கொள்ளாதவர் சிலர். புரிந்துகொண்டும் அஞ்சிக் கொண்டி ருந்தவர் சிலர். எல்லோரும் கண்ணை மூடிக்கொண்டிருந்தனர்.

கத்தியவன் கத்திக்கொண்டேயிருந்தான். கத்திக் கத்தித் தொண்டை கிழிந்தது. நெஞ்சுந்தான். மூக்கிலும் வாயிலும் உடலின் உயிர்நாடிபாயத் துடிதுடித்து அடங்கினுன். வெளியே கடும்போர்! தூங்குவார் நிலத்துக்கு உறிமையாளனுகப் போராட் டம்! கொஞ்ச நேரம் சென்றது! இன்னெருவன் கண்ணை விழித்துப்பார்த்தான்! "உம்! எதிரேயுள்ள நிலமத்தனையும் என் னுடையது. இதற்கு உரிமை கொண்டாட இவர் யார்? என் தாத்தா ஊரை ஆண்டவர். என் பாட்டன் பக்கத்து ஊரில் கொடி நாட்டியவன். என்னை எதிர்க்க யாரால் ஆகும்?" என்று தோளைத் தட்டினுன் — படுத்துக்கொண்டேதான்.

"களத்திலே புகுந்தால் அத்தனை தலையையும் அம்மானை ஆடிவிடுவேன் அவர் தம் குருதிகுடித்து வேட்கை அடங்கு வேன்!" — என்றான் — அரைத்தூக்கத்திலிருந்துகொண்டே. அவன் கதை அதோடு முடிந்தது.

வெளியே கடும்போர்! தூங்குபவனது நிலத்துக்கு உரிமை யாளனாக ஆக! கொஞ்சம் நேரம் சென்றது. இன்னொருவன் கண்ணை விழித்துப் பார்த்தான், வெளியே போரிட்டுக்கொண் டிருந்தவரில் ஒருவன் இவன் விழித்துக்கொண்டதைப் பார்த் தான். கையைக் காட்டினான், இவன் அங்கே போனான். இவன் சிரித்தான். அவன் சிரித்தான், அவன் வாழ்ந்தான். இவன் செத்தான். அவன் கதை அதோடு முடிந்தது.

வெளியே கடும்போர். தூங்குவார் நிலத்துக்கு உரிமை யாளனாக ஆக. கொஞ்ச நேரம் சென்றது.

இன்னொருவன் கண்ணை விழித்தான். அவன் நத்தி வாழ் வதில் தேர்ச்சி பெற்றவன். அதன்படியே தன்கதையை முடித் துக்கொண்டான் அவன்.

இன்னொருவன் கண்ணை விழித்தான். அவன் ஒரு கோழை! அஞ்சி அஞ்சியே தன் கதையை முடித்துக்கொண்டான்.

இன்னொருவன் கண்ணை விழித்தான். அவன் நாவன்மை யாளன் — கல்வியில் சிறந்தவன். பேச்சிலேயே தன் வாழ்வை முடித்துக்கொண்டான்.

வெளியே கடும்போர்! தூங்குவார் நிலத்துக்கு உரிமை கொண்டாட! தமிழ்த்தாய் எழற்குத் திறனின்றி எழுவான். ஒவ்வொருவனையும் ஆவலுடன் பார்த்து ஏமாந்து குருதிக் கண் ணீர் கொட்டினள்.

வெளியே கடும்போர் — ?

தூங்குவார் நிலத்தைச் சூறையாட, கொள்ளையிட, ...

தமிழ் நாட்டு மாணவர்க்கோர் வேண்டுகோள்!

செந்தமிழ்த் தீனி உண்ணும் நந்தமிழ் மாணவ மணிகளே!

'தென்மொழி' உங்கள் நலன்கருதி முளைத்த முழு வெண்ணிலா! இனிய தமிழ் என்னும் தண்ணொளியை உங்கள் மேல் பரப்பி உள்ளும் புறமும் உங்களைக் குளிர்விக்கும் நல்லெண்ணத்தால் தொடங்கப்பெற்றது. கடந்த சில காலமாக அரைசியல் நடப்பும், தீநிலைச் சூழ்வும் காரணமாக, மாணவர் தம் உள்ளத்தே புகைப்பும் காழ்ப்பும் மூடிக்கொண்டு,புன்மைச் செயல்கட்கு அடிகோலுவதாய் உள்ளதை யாம் கண்டு உளங் கவன்றோம். நெஞ்சு புழுங்கினோம். திசைக்கொரு குரல் கேட்டுத் திகைக்கும் உங்கள் நிலையை உன்னி உன்னி வருந்தினோம். தமிழ் நாட்டின் எதிர்கால வாழ்வைத் தாங்கி நிறுத்தப் போகும் எந்தமிழ்நாட்டு மாணவர் தம் அடி முறிந்து வீழாது தடுத்து நிறுத்த வல்லார் ஒருவரேனும் உளரோ என்று மக்கள் கடலை ஊடுருவிக் கண்டோம். தமிழ் மலை மறைமலையடிகளார் துஞ்சிய பின்னை, ஒழுக்கம் ஒழுக்கம் என்று ஓயாது முழக்கும் தமிழ்க்கடல் திரு. வி. க. உயிர்ப்பயர்ந்த பின்னை, நந்தமிழ் நாட்டு மாணவருலகிற்கு வாய்மை நிழல் விரிப்பாரை யாங்கணுங் காணாது துயர்கொண்டோம். அரைசியல் வலை வீசுவார் ஒருபுறமும், சமய வலை விரிப்பார் ஒருமருங்கும், வன் செயல் புகலுவார் ஒருசிறையும், கொடுமொழி பயிற்றுவார் ஒருபக்கலும், மாணவர் குழுவை ஈர்த்துப் பிரிப்ப, புயல் பட்டுழன்ற கடற்கரை ஊராய்ச் சிதைகின்ற நிலைகண்டு ஆறாத் துயர் கொண்டோம். எதிர்காலத் தமிழகத்தின் பாழ்நிலை எம் முன்னே தோன்றி நின்றது.

அன்புசால் மாணவ மாணவியரே !

திங்கள் மண்டிலமும், செவ்வாய் மண்டிலமும், எங்களுடையனவாம் என்று வல்லுரை கூறுவாரைக் காண்கின்ற இக்காலே, பொங்கு தமிழ் நாட்டார் போயொளியவும், தங்கி வாழ்வு காணவும் ஓர் தனியிடமின்றி இருப்பதோ? இந் இந்நிலைக்கு நாம் குனிந்து கொடுப்பதோ? இத்துணைக்கும் நாம் ஆற்றவேண்டுவதென்னே? மொழிவளர்ச்சியே நாட்டு வளர்ச்சி! மக்கள் உள்ளம் பண்பட வேண்டுமாயின், தூய இலக்கியங்களும், முன்னோர் வரலாறும், உலக வரலாறும் அறிதல் வேண்டுவ தின்றியமையாததன்றோ? இவ்வழிக்கெல்லாம் **'தென்மொழி'** உங்கட்குக் கைவிளக்கு. உங்களை அது வளர்க்கும். உங்களால் அது வளரும். **'தென்மொழி'** மாணவர் தம் ஏடு! நீங்கள் அதனைப் புரத்தல் செய்யாவிடில் மொழியையும், நாட்டையும் பேணாதவராவீர்.

கல்லூரி மாணவர்தம் கைகளைத் **'தென்மொழி'** அழகு செய்தல் வேண்டும்; தமிழாசிரியரின் இலக்கிய நாவில் **'தென்மொழி'** விளையாடல் வேண்டும்,

ஒரே ஒரு குறை

தமிழ்நாட்டுக் கோயில்களில் வடமொழியில் வழிபாடு நடைபெறுவதைக் தடுக்துத் தமிழிலேயே வழிபாடு நடத்த வேண்டும் என்று தமிழறிஞர் கூறுவதை நாம் வரவேற்கின்றோம். அதனால் எந்தக் குறையும் ஏற்பட்டு விடாது; ஆனால் நம் நாட்டிலுள்ள கோயில்களில் உள்ள கடவுளர் தம்மில் ஒருவர்க்கேனும் தனித்தமிழ்ப் பெயர் இல்லாது, பிருகதீஸ்வரர், மீனாக்ஷியம்மன், நடராஜப்பெருமாள், சுப்ரமண்யர், விநாயகர், வைத்தீஸ்வரர் முதலிய வடமொழிப் பெயர்களே இருப்பது பெருங்குறை. வடமொழிப் பெயரில் உள்ள கடவுளர்க்கு வடமொழியிலேயே வழிபாடு நடைபெறல் வேண்டும் என வடமொழியாளர் கூறற்கு இடமுண்டே! ஆகலின் தமிழ் வழிபாடு வேண்டும்: தமிழறிஞர் கண்களில் முதன் முதலிற் படவேண்டியது இந்தக் குறைபாடே!

'தென்மொழி'யைப் போற்றிப் புரக்கும் கல்லூரி மாணவர் தம்முள் முதன்மையாக நிற்பவர், திருச்சிராப்பள்ளி தூய வளவர் (சூசையப்பர்) கல்லூரித் தமிழ்ப் பேரவைச் செய லாளர் திரு. **மு. சாத்தையா** அவர்களே. அவர் தண்டமிழ்ப் பணிக்கு நாம் கைகூப்புகின்றோம். அவர் போன்ற தூய தனித் தமிழ்ப் பற்றும், எஃகுள்ளமும், கொண்டு, எந்தமிழ்த் தாய்க்கு இரவென்றும் பகலென்றும் பாராமல் பணிபுரிகின்ற வாய்மை யாளர் பலர் தேவை. வாணிக எண்ணமும், குறுக்குப் பிழைப் பும், கொள்கைக் கூனும் கொண்ட பெரும்பான்மையான விற்பனையாளரைத் **'தென்மொழி'** நம்பியிருக்கவில்லை. புற் றீசல்கள் போல் பறந்து திரியும் வெற்றுரைத் தாளிகைகளைப் போல் **'தென்மொழி'** தெரு இதழாக விரும்பவில்லை. சுவைத் துமிழும் கருவேப்பிலையாக இவ்விதழ் பயன்படுதல் கூடவே கூடாது.

மாணவர் தம் மாணிக்கக் கைகளின் அன்பணைப்பை யும், அவர் நெஞ்சின் வாய்மை இருக்கையையுமே **'தென்மொழி'** நாடி நிற்கின்றது.

தமிழ்நாடு மிகத் தாழ்ந்து போகின்றது. சென்ற நூற்றாண்டைவிட இந்த நூற்றாண்டில் அறிவியல் வளர்ந்ததைப் போல் உளவியல் வளரவில்லை; ஒழுக்கவியல் சிறக்கவில்லை. இவை இல்லாத மக்கள், விசைப் பொறியால் இயங்கும் சீனத்துப் பாவையாகத் தோன்றி மறைவரேயன்றி, எல்லா உயிரினும் மேம்பட்ட மக்களாக இருத்தல் முடியாது என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

மக்களிடம் கூறவேண்டியவற்றையே **தென்மொழி** கூறும்.

மாணவர் தம் உள்ளக் கற்பனைகளை இருகைகள் ஏந்திப் பெற்றுத் தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் தனித் தமிழ் மணக்கச் செய்யும்.

இத்தகைய நல்ல நோக்கங்கட்காகத் தொடங்கப் பெற்ற இவ்விதழைப் பல்லாற்றானும் காக்க வேண்டுகின்றோம்.

நீங்கள் செய்யும் தினையளவு உதவி பனையளவாகக் கருதி நன்றி காட்டப்பெறும். உறுப்பினர் அல்லாத மாணவ நண்பர்தம்மை இன்றே உறுப்பினர் ஆக்கி உதவியும் தென்மொழி காணுந வரைக் காணச்செய்தும், படியாதார்க்குப் படிக்கக் கொடுத்தும் தண்டமிழ்த் தாய்க்கு அணியாக நிற்கும் இதனைச்சிறக்கச் செய்யு மாறு மாணவர் உலகை வேண்டுகின்றோம்.

பெருஞ்சித்திரன் (ஆசிரியர்.)

வளருஞ் செல்வி

—[ச. சுப்பையா]—

❋

முத்தமிழே! முழவழகே! உயிரே! அன்பு,
　　மூண்டெழவுஞ் செய்கின்ற காதல்ஊற்றே!
இத்தரையின் முதலாக வெழுந்து செம்மை
　　இருந்துநலம் பூண்டவளே இளமைமிக்கோய்!
ஒத்தநல முடையமொழி இல்லையாக
　　ஓங்குபுகழ்ச் செம்மொழியாய்த் திகழ்ந்தாய்நன்றே!
செத்தவளாம் வடமொழியாள் சிறுமைசெய்தும்
　　சிறந்தவளே! நிறைந்தவளே! வளர்ந்தநங்காய்!

வாழ்கநீயே வையத்தில் வளமையுற்றே.
　　வண்டமிழே! மொழியரசீ! தழைத்துவாழ்க!
சூழ்கடலின் புவிமீது முதலில்தோன்றித்
　　தொன்மைநலம் சிறந்தவளே! தண்மைகொண்டாய்!
தாழ்வுறவே செய்யும்பல பகைவர்சூழ்ச்சித்
　　தரைமட்ட மாக்கிடுவோம்! தமிழர்க்குண்டோ
வாழ்விங்கே பைந்தமிழ்தான் மறையும்என்றால்!
　　வளர்கலையின் நிலைக்கேற்ப வளருஞ்செல்வீ!

❋　　❋

சாக்ரடீசு.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

சாக்ரடீசின் மாணவர் குழுவில் இருந்தோர் பலதிறப்பட்டவராவர். ஆட்சிக்குழுவின் முப்பதின்மரில் ஒருவனான 'கிரிட்டசு', 'அல்சிபிடியாசு', 'கிரிட்டோ' பிளாட்டோ, செனோபன், இரண்டாம் பெரிக்கள்சு, சிபெசு, மெய்யறிஞன் தேபன், புகழ்பெற்ற துன்பியல் நாடக ஆசிரியன் 'எரிபெடசு' ஆகியோர் சாக்ரடீசின் தலையாய மாணவர். அவரெல்லாம் சாக்ரடீசிடம் தாமாகவே மாணவராக வந்து சேர்ந்தனர். தன் கொள்கைகளைப் பரப்புவதற்காக அவன் தனிப் பயிற்சியோ, பள்ளியோ நடத்தவில்லை.

அவன், அவர்தம்பால் வினாக்களை எழுப்புவதும், அவர் தம் வாயிலிருந்து விடைகளை வருவிப்பதும் ஆனவகையாலேயே அவர்க்கு அறிவொளி ஊட்டினான்.

சாக்ரடீசுக்கு இரு மனைவியர் இருந்தனர். முதல் மனைவிக்கு இரு ஆண்குழந்தைகளும், இரண்டாவது மனைவிக்கு ஒரு பையனும் இருந்தனர். இரண்டாவது மனைவி ஒரு அடங்காப்பிடாரி என்று கூறுகின்றனர். ஆனால் அதற்கு எவ்வகையான அடிப்படையும் இல்லை. அவ்வாறு இருந்திருப்பினும் பலருடனும் பேசி மகிழ்வதிலேயே தன் வாழ்நாட்களைப் போக்கிக் கொண்டிருந்த வறுமைபோர்த்த ஒரு மெய்யறிவாசிரியனை மணந்துகொண்ட ஒரு பெண்ணுக்கு அத்தகைய மனநிலைகள் இருந்திருக்கக்கூடும் என்றும் கருதலாம்.

கி. மு. 399-ல் சாக்ரடீசுக்கு எழுபது ஆண்டுகள் நடந்துகொண்டிருக்கும்போது அவனுடைய பகைவர் அவன்மேல் பழிதீர்த்துக்கொள்ள வழக்கு ஒன்றைத் தொடர்ந்தனர். அப்பேரறிஞன்மேல் இரு குற்றங்கள் சாற்றப்பட்டன.

ஒன்று, எல்லோரும் போற்றும் அந்நாட்டுக் கடவுளிடம் அவன் நம்பிக்கையற்றிருந்ததாகும். இரண்டாவது, இளைஞரைத் தன் பேச்சுத்திறத்தால் தவறான வழியில் செலுத்தியது என்பதாகும்.

'உலைசியசு', என்ற சிறந்த பேச்சாளன் சாக்ரடீசைத் தப்புவிக்க ஒரு நீண்ட முறையீடு எழுதிக் கொடுத்தான். ஆனால் சாக்ரடீசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அது அறிவுள்ள செயலல்ல என்றும் கோழைத்தனமே என்றும் கூறி மறுத்துவிட்டான்.

உள்ள உறுதியாலும் செயல் கவர்ச்சியாலுமே ஒரு மெய்யறிவாளன், குன்றிலிட்ட விளக்காகத் திகழவேண்டும் என்பது அவன் கொள்கை!

சாக்ரடீசு தன்மீது சுமத்தப்பட்ட குற்றங்களை மறுத்து வழக்காடவில்லை. அரசமன்றத்திலும், பெருந்தன்மையோடும் பணிவோடும் எளிமையான சொற்களால் தன் கொள்கைகளை வலியுறுத்திக்காட்டினான்.

"மக்கள் இன்பமாக வாழவேண்டும் என்பதற்காக என் உடைமையான பேச்சுக்களை ஏதன்சு மக்களுக்காகச் செலவிட்டேன். இது, இயற்கையால் எனக்கென்று ஏற்படுத்தப்பட்ட கட்டளையாகும்: இந்த அறமன்றம் கூடியிருந்து முடிவுகட்டும் தீர்ப்பைவிட இயற்கை எனக்கு ஏற்படுத்திய அந்தத் தீர்ப்பை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்."

இவ்வாறு சாக்ரடீசு அறமன்றத்தில் கூறினான். இந்தப் பேச்சு மன்றத்தாரை மிகவும் வருத்தியிருக்கும் என்பதில் ஐய மில்லை. மேலும் அவன் பேசினான்,

"நீங்கள் எனக்குத் தண்டம் அளிப்பது, நான் உண்மையைத்
தேடி உழைப்பதைத் தடுப்பதாகவே இருக்கிறது. அது அவ்வாறு
னால், ஏதன்சு மக்களே! உங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.
இயற்கை என்னை இந்தப் பணிக்காகவே ஏவியிருக்கிறது. அதற்
கான வலுவையும் கொடுத்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.
அதற்கே நான் என்றும் பணிவேன். என் உயிருள்ளவரை நான்
பேசுவதை நிறுத்திக்கொள்ள மாட்டேன். என்னைவந்து காண்ப
வர்களிடமும், என்னைக் காணமல் புறம் போவோரிடமும் நான்
ஓயாமல் பேசியே தீருவேன். அறிவையும் உண்மையையும் பெற்
றுத் தூய்மையடைவதை விடுத்து, உங்கள் உள்ளத்தை செல்வப்
படுகுழியிலும், நாகரீகச் சேற்றிலும் மூழ்கடிக்கின்றீரே இதுபற்றி
நீங்கள் நாணவேண்டும். என்னுடைய அறிவுத் திறனால் எல்லா
மக்களையும் கெடுத்து வருகிறேன் என்று குற்றம் சாட்டியிருக்
கின்றீர். எனக்கு அறிவிருப்பதாக நான் கருதவில்லை. ஆனால்
மற்றவரைவிட நான் ஒரு வகையில் வேறுபட்டவனாக இருக்கி
றேன். மற்றவர் ஏதும் தெரியாதவராயிருந்தும் எல்லாம் தெரிந்
தவர் என்று சொல்லிக்கொள்கின்றனர். நானோ ஒன்றும் அறி
யாதவன் என்பதை அறிந்துகொண்டிருக்கிறேன். இளைஞருடைய
ஒழுக்கத்தைக் கெடுத்து வருகின்றவன் நான் என்பதாக என்மேல்
வேறு ஒரு குற்றமும் சாட்டுகின்றனர். ஆனால் நான் ஒன்று கேட்
கிறேன். என் ஒருவனுடைய பேச்சால் இளைஞரெல்லாம் கவரப்
படுகின்றனர் என்றால் உங்கள் எல்லோருடைய நேர்மையாலும்
கட்டுப்பட்டாலும் அவர் என்பால் நெருங்குவதை ஏன் தடுக்க

முடியவில்லை?...... நீங்கள் எனக்குக் கொடுக்கப்போகும் தீர்ப்பு என்ன என்பதை நான் அறிவேன். இறப்பைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது. அது ஒரு வேளை நல்லதாகவும் இருக்கலாம். அதற்கு நான் அஞ்சவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் அறிவேன். தீமையிலும் நன்மை இருக்கிறது என்பதே அது!"

இந்தப் பேச்சை கேட்டதும், சாக்ரடீசைக் குற்றவாளி என்றே கருதி அவனுக்குக் கொடுக்கப்போகும் தண்டம் பற்றி முடிவு செய்யப்பட்டது. முடிவில் இறப்புத்தண்டம் விதிக்கப்பட்டது. அக்காலத்துச் சட்டபடி குற்றவாளி இறப்புத் தண்டத்திற்கு மாருக வேறு தண்டத்தைக் கேட்டுக்கொள்ளும் உரிமை இருந்தது.

"என்ன தண்டம் ஏற்றுக்கொள்கிருய்?" என்று மன்றத்தார் கேட்டனர், "என்னை நாடுகடத்தி விடுங்கள்" என்று இவன் கேட்டிருந்தால் மன்றத்தார் அவ்வாறே தீர்ப்புக் கூறியிருக்கக் கூடும், ஆனல் அவன் கீழ்வருமாறு பேசினன்,

"நான் என் சொற்பொழிவால் மக்களுக்கு நன்மையே செய்தேன். அவ்வாறு நன்மை செய்தவனை அரசியலார் தம் செலவில், வாழ்நாள் முழுதும் காத்துப் புரத்தல்வேண்டும், அதையே நானும் வேண்டுகிறேன்."

சாக்ரடீசின் இந்த வேண்டுகோள் மன்றத்தினரின் சினத்தைப் பெருக்கியது. அவனுக்கு இறப்புத் தண்டத்தையே வலியுறுத்தினர். அவனுக்காக அவன் நண்பர்கள் அத்தண்டத்தை நீக்குமாறு வேண்டினர், அதற்காக முப்பது "மைன"க்கள் **(90 Shillings)** ஈட்டுத் தொகை கட்டவும் முன்வந்தனர். ஆனல் சாக்ரடீசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை, "சாக்ரடீசு" நஞ்சு குடித்து இறக்கவேண்டும்" என்று முடிவு செய்யப்பட்டது.

சாக்ரடீசு அதைக் கேட்டுத் துணுக்குறவில்லை, அமைதியுடன் பேசினன்;—

"நாம் பிரியும் நேரம் வந்துவிட்டது, நான் இறக்கப் போகிறேன், நீங்கள் வாழப்போகிறீர். ஆனல் எவர் நற்செயல்கள் செய்தார் என்பதை அறக்கடவுளைத் தவிர வேறெவரும் அறியார்!..."

இடையில் ஒரு திருவிழா காரணமாக இறப்புத் தண்டம் நிறைவேற்றப்படாமல் மூன்று கிழமைகளுக்குத் தள்ளிப்போடப்பட்டது. அவன் விலங்குகளால் பிணைக்கப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டான். அக்காலை, அவன் நண்பர் தம்மை வரவேற்று அவரோடு மகிழ்ச்சியாகப் பேசி ஆறுதலும் கூறினன். அது போது கிரீட்டோ என்ற அவரது மாணவன் சாக்ரடீசைத் தப்பித்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொண்டு, அதற்கான வழிகளைத் தான் செய்வதாகவும் கூறினன். ஆனல் சாக்ரடீசு அதைக் கண்டித்தான். அறமன்றத்தார் தனக்குச் சட்டப்படி அளித்த தண்டத்திற்குத்தான் பணிந்தே தீரவேண்டுமென்று உறுதியாகக் கூறினன். (தொடரும்.)

(6–ம். பக்கத் தொடர்ச்சி.)

ஆக, இதுபற்றி நாம் கொண்ட கருத்து என்னையெனின், கற்றவர் மாட்டுமன்றிக் கல்லார் மாட்டும் திகழுவனவாகிய மக்கட்பண்பும், ஒழுக்க விழுப்பமும் இல்லாமைப் பொருட்டே நாடும், நாட்டை இயக்குகின்ற அரசும் சிறப்பாக நாம் இலக்கியங்களில் படிக்குமாறும், கேட்குமாறும் அமைய இயலவில்லை.

> **"என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணது**
> **கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்**
> **குடிபழி தூற்றுங் கோலே ஞகுக!"** (புறம்)

என்று சூளுரைக்கும் அரசையுங் காணமுடியவில்லை.

> **"யான்கண் டனையரென் இளையரும் வேந்தனும்**
> **அல்லவை செய்யான் காக்கு மதன்றலை**
> **ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்**
> **சான்ருேர் பலர்யான் வாழு மூரே!"** (புறம்)

என்று பாடி மகிழ்வாரையும் காணற் கியலவில்லை.

இனி, ஒழுக்கத்தானும், பண்பானும் கவலுருமல், பொருளும், அரசுமே வாழ்வெனக் கொண்டு சிறக்கும் புறநாட்டார் எல்லாவற்ருனும் பெருமையுறல் காண்கின்ருேமே, அஃதெப்படியோ? என்று கேட்பார்க்குச் சில கூறுகின்ருேம்.

மேனுட்டாரின் வாழ்வு எத்தகையது என்பதையும், நம் நாட்டாரின் வாழ்வு எத்தகையது என்பதையும் நன்ருக அறிந்து கொள்ளக் கருவிகளாயிருப்பன அவரவர் நாட்டு இலக்கியங்களே!

மேனுட்டாரின் இலக்கியங்கள் யாவும் ஒழுங்கு ஒழுங்கு என்று அரற்றுவன. நம்நாட்டு இலக்கியங்கள் முற்றும் பசி பசி என்று அழுங்குவன. அவர்க்கு வயிற்றைப்பற்றிக் கவலையில்லை. வாழ்வைப் பற்றிய கவலையே மிகுவானது நமக்கு

வாழ்வைப் பற்றிக் கவலையில்லை. வயிறு பற்றிய ஏக்கமே மிக இருந்தது.

"ஒரு நா ளுணவை ஒழியென்றால் ஒழியாய்
இரு நாளுக் கேலென்றால் ஏலாய் — ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது."

என்று மேனாட்டார் யாரும்பாட இயலாது.

ஒழுக்கம் ஒழுக்கம் என்று முழக்கிய அன்னா கரினினாவும், ஒழுங்கற்றுப்போன கதையும், அதுபோன்றவையுமே அவரின் இலக்கியங்களாகத் திகழ்கின்றன. அவர்தம் சாகா இலக்கியங்கள் வாழ்வின் உண்மைப்பயன் காண ஏங்கியதாகவும், அது அங்குக் கிடைக்கவில்லை யென்றும் உலகப் பேரறிஞர் டால்ஸ்டாய் அடிகள் எழுதியுள்ளனர்.

ஆனால் இங்கோ

"குப்பைக் கீரையை உப்பின்றி உணக்கி ஒருநாள் ஒருபொழுது" உண்டதாக இலக்கியங்கள் பேசுகின்றன.

இற்றைத் தமிழகத்திலும் மாந்தர் பசியைப் பற்றிப் பேசுகின்றனர். ஆனால் அதற்கொரு வழியுங் காணவில்லை. ஒழுக்கத்தைப்பற்றியும், பண்பாடுபற்றியும் பேசிப்பேசிக் காற்று மண்டலத்தைக் கூற்று மண்டல மாக்குகின்றனர். ஆனால் அவ்வாறு நடப்பாரையும் நடந்து காட்டுவாரையும் காணோம். ஆகலின் மக்கள் என்று பண்பாட்டில் சிறந்து விளங்குகின்றனரோ, அன்றே ஆட்சியும் நெறியிற் சிறந்து விளங்க இயலும். கற்றால் மட்டும் போதாது; கற்றவாறு நிற்கவும் மக்கள் பழகல் வேண்டும். இதுபற்றியே வள்ளுவர் ஒழுக்கம், பண்பு என்று முழங்குகின்றார்.

இன்று தமிழகங் காண்கின்ற நிலையில் மக்கள் செய்ய வேண்டுவனவும், ஆள்நர் செய்ய வேண்டுவனவும் நிறைய உள. இருவரும் முறையாக அவற்றைக் கடைப்பிடியாய் நின்றாற்று வாராயின் நம் தமிழகம் விரைந்து முன்னேறும். மக்கட் பிரிவும் சமயப்பிரிவும் அவற்றை வளர்க்கும் கொள்கையும், சட்டமும் உடனே நீக்கப்படல் வேண்டும். வெற்று ஆரவாரச் சிறு தொழில்களையும், பெருந் தொழில்களையும் தடைப்படுத்தி, நாட்டை ஒரு உழவுநாடாக முதலில் அமைத்தல் வேண்டும். கைத்தொழில் நாடாகவும் உழவு நாடாகவும் ஒருங்கே ஆக்கி விடுதல் என்பது எவ்வாற்றானும் இயலாததொன்று. ஒரு கைத்தொழில் நாட்டிற்கு மிகுந்த பொருள் தேவை. உழவு நாட்டிற்கோ, மிகுந்த உழைப்புத் தேவை. நம் நாடு பொருளற்ற நாடு, மக்கட் பெருக்கம் மிகுந்த நாடாகிய இஃது உழைக்க முற்படுமானால் பொருள் தானே குவியும், மக்கள்

'தென்மொழி' பற்றிச் சிங்கப்பூர் 'தமிழ்முரசு'
13—9—59 இதழில் முழக்கியிருக்கும் மதிப்புரைச் சுருக்கம்.

(தமிழ் நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காரர் என்று சொல்வோர் தம்மைவளர்த்துக் கொள்கின்றரேயன்றித தமிழையா வளர்க்கின்றனர்?

காழ்ப்பும், சூழ்ச்சியும் மிக்கத் தமிழக ஏடுகள் கூறத் தயங்குவனவற்றை, கடல் கடந்த எந்தமிழ் மக்களின் முழக்கமாகத் 'தமிழ் முரசு' அறைந்திருக்கின்றது.

'தென்மொழி' உலகத் தமிழ்ப் பெருமக்களால் பெரிதும் வரவேற்கப் படுகின்றது என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு.)

—ஆசிரியர்.

தென்மொழி:

தூய்தமிழ் வளர்க்கத் தோன்றியுள்ள தாளிகை

தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுதற்பொருட்டே ஒரு தாளிகை தோன்றுகிறதெனின் அத்தாளிகைக்கு இன்றியமையாத முதற்பெருந் தகுதி மொழித்துறைத் தகுதியாகும். இத் தகுதி முற்றிலும் வாய்ந்த தனித் தமிழ்த் தாளிகை ஒன்று இப்போது தமிழகத்தில் தோன்றியுள்ளது. தென்மொழி என்பது அதன் பெயர். 'என்றுமுள தென்றமிழின் பால்' 'விடுதலறியாத விருப்பினராகிய' நன்மக்கள் சிலர் இதனை நிறுவியுள்ளனர்.

இற்றைத் தமிழகத்தில் மொழித்துறை வல்லார்க்கு வரம்பாக விளங்குகின்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியராகிய பண்டித, புலவ, வித்துவ, ஞா. தேவநேயப் பாவாணரின் அரவணைப்பில் இத் தாளிகைக் குழவி தவழ்கின்றது என்னும்

ஒருங்கே இருந்து உழைக்கத் தடையாயிருப்பன சாதிகளும் சமயங்களும் ஆதலின் அவற்றை முதலில் ஒழுங்குசெய்து கொள்ளல் அரசின் தலையாய கடமை.

இவ்வாறு அரசினர் செய்யும் நல்வினைகட்கு மக்கள் எல்லாவற்றானும் துணையாக நிற்றல் வேண்டும். இவ்வாறன்றி இந்நாவலந் தீவையோ, தமிழகத்தையோ முன்னேற்றிவிட வேண்டுமென்று முனைகுவார் நெல் குற்றிக் கைசலிப்பாரே ஆவர் என்பதை மீண்டும் கூறுகின்றோம்.

செய்தி அறிந்து பெரிதும் உவக்கின்றோம். அதே சமயம் வருந்தத் தக்க செய்தியொன்றும் இத்தாளிகையில் காணப்படுகின்றது. இத் தாளிகைக்குச் சிறப்பாசிரியராக இருக்குமாறு பாவாணரைத் தாம் வேண்டிக்கொண்டதாகவும் அவரும் மனமுவந்து இசைந்ததாக வும் ஆயினும் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தார் இசைவு தராமையின் அவர் இப்பொறுப்பினை ஏற்கவியலாது போய்விட்ட தாகவும் தாளிகை ஆசிரியர் எழுதியுள்ளார். இச்செய்தி தமிழர் தவக்குறைவையே காட்டுகின்றது.

பல்கலைக் கழகத்தார் பாவாணருக்கு விரைவில் இசைவு வழங்குவர் எனத் தாளிகையாளர் நம்புவதுபோலவே நாமும் நம்பு கின்றோம்.

இலக்கண, இலக்கியச் செம்மைசான்ற தமிழ் மொழியை மீண்டும் அரியணையில் அமர்த்தப் பாடுபடுவதே இத்தாளிகையின் குறிக்கோள் என்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

இதன் முதலிதழில் வந்துள்ள கட்டுரைகளும் பாக்களும் இத் தாளிகையின் செப்பத்தை நன்கு புலப்படுத்துகின்றன.

வணக்கம் என்னும் தென்சொல் இருப்பவும் அதனைக்கொள் ளாது 'நமஸ்காரத்தை' 'உடும்புப்பிடியாய்ப்' பிடித்துக்கொண்டு உலவிவருகின்ற ஒரு தாளிகையைக்கூடத் தமிழர் வாங்கத்தான் செய்கின்றனர். தமிழனின் மொழியுணர்வு எவ்வளவு வலிகுன்றிக் கிடக்கின்றது என்பதற்கு வேறு சான்று வேண்டுமோ?

பாவாணர் போன்ற பெருமக்களும் தென்மொழி ஆசிரியர் குழுவினர் போன்ற ஊக்கமிக்க நன்மக்களும் தமிழைக்காக்க உறுதிபூண்டு தளராது உழைத்து வருகின்றனர். இது போதாது. இந்த மொழியுணர்வும் உலைவிலா ஊக்கமும் தமிழ் மக்களிடத்தே வெள்ளம் போலப் பெருகுதல் வேண்டும். இத்துறையில் தமிழ் மக்களை ஊக்குவிக்க நல்ல தனித்தமிழ்த் தாளிகைகள் (பத்திரிகை கள்) வேண்டும். இத்தகைய தாளிகைகள் ஏற்கனவே இரண்டு இருக்கின்றன, எனினும் அவற்றில் சில சமயங்களில் அவற்றின் தகுதியொடுபடாத கட்டுரைகளும். பாக்களும் வருகின்றன. இந்தக் குறை தென்மொழியில் புகுதலாகாது.

இத் தாளிகை முழுவதையும் பார்க்கும்போது இதற்குப் பாவாணரின் நேர்முகமான தொடர்பு இல்லையாயினும் அவரது அரவணைப்பு உண்டு என்பது பளிச்செனப் புலனுகின்றது.

தமிழைப் பேணிவளர்ப்பதற்காக எழுந்துள்ள இத் தாளிகை யைத் தமிழன் என்று சொல்லிக் கொள்கின்ற ஒவ்வொருவரும் (உறுப்பினராகச் சேர்ந்து) வாங்கிப் போற்றுதல் வேண்டும். இது தமிழரின் முதற் கடமையாகும்.

சுருங்கச் சொல்லுமிடத்துத் தென்மொழியைத் தேன்மொழி என்பது முற்றிலும் பொருந்தும்.

இத் தாளிகை வைகலும் வளர்ந்து சிறக்க வாழ்த்துகின்றோம்.

...மிழர் வாழ்வு முறைகளையும், வரலாற்றுச் ...புக்களையும், ஆட்சி நெறிகளையும், கலைத் திறன்களையும் செப்பமாக எடுத்துக்கூறும் உயர் தமிழ் நூல்கள்.

இன்றே வாங்கிப் படித்துப் பயனடைக.

தமிழக வரலாறு	3—00
தமிழக ஆட்சி	2—00
தமிழகக் கலைகள்	2—50
தமிழர் நாகரிகமும் பண்பாடும்	2—50
சைவ சமய வளர்ச்சி	5—00
தமிழரசி (புதினம்)	2—50
நாட்டுக்கு நல்லவை (தமிழகப் பெண்மணி ஒருத்தியின் சீர்திருத்தச் செயல்களைக்கூறும் அருமையான புதினம்)	3—50

விற்பனை உரிமை

பாரி நிலையம்

59. பிராட்வே

சென்னை 1.

அன்பர் பொறுக்க.

அச்சக இடமாற்றத்தின் காரணமாகவும், வெளியூர்ச் [illegible] விறுலும், வேறு பல தவிர்க்கவியலா இடர்ப்பாடுகளினாலும், [illegible] ரவரித் திங்கள் 15-ஆம் நாள் வெளிவரவேண்டிய இதழ் வந்[illegible] தென்மொழி அன்பர் பொறுத்துக்கொள்ள வேண்டுகி[illegible] இனி இதழ்கள் குறி[illegible] கிடைக்கும்.

* தென்மொழி முதல் இசையிலிருந்து உ...
விருக்கின்றவர்க்குப் (பொங்கல் மலர் பெ...
யிருப்பினும், பெறுதவராயிருப்பினும்,) பதினன்க...
இசையோடு கட்டணம் முடிவுறுவதால், பதினைந்...
தாம் இசையிலிருந்து அன்னார் தங்கள் கையொப்...
பத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகின்றோம். அவ்வாறு முன்னரே புதுப்பிக்காதவருக்குப் பதினைந்தாம் இசையிலிருந்து இதழ்கள் நிறுத்தப் பெறும்.

* அலுவலகத்திற்கு எழுதும் மடல்களில் உறுப்பினர் தங்கள் முகவரிகளைத் தவறாமல் குறிப்பதுடன், தந்தம் உறுப்பினர் எண்களையும், குறிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

* புதுப்பித்துக்கொள்ளும் பழைய உறுப்பினர் முன்னிருந்த உறுப்பினர் எண்களைத் தவறாது பண விடைத் (Money Order) தாளில் குறித்தனுப்புமாறு வேண்டுகின்றோம்.

— அமைச்சர்.

...மொழி, நெல்லிக்குப்பம், தெ. ஆ. மாவட்டம்.

...நவர் பதிப்பக உரிமையாளர், கூ. இரா. செகந்நாதன்
...ால் நெல்லிக்குப்பம் (தெ. ஆ. மாவட்டம்) ஸ்ரீ குரு
...யில் அச்சிடப்பெற்றுப், பெருஞ்சித்திரன் அவரை
...சிரியராகக்கொண்டு வெளியிடப்பெற்றது.